சார்பு நீதிமன்றம், மேலூர்
OS 275/2023

பெயர் : கருப்பையா
தகப்பனார் பெயர் :முனியாண்டி என்ற மச்சைக்காளை
கணவர் பெயர் :
வயது :85
கிராமம் :கருங்காலக்குடி
வட்டம் :மேலூர்
தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.10.2024

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். ஆதார் அட்டை ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது வா.சா.ஆ.1. வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டது வா.சா.ஆ.2. 05.09.1986 ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் பதிவு செய்யப்படாத பாகபிரிவினை பத்திரத்தினுடைய நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. 12.04.1988 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகபத்திரத்தின் ஒளிநகல் வா.சா.ஆ.4. 28.06.2010 தேதியிட்ட கிரைய பத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.5. ரசீதா என்ற ரஸியாபேகம், மகேஸ்வரி அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் ஒளிநகல் வா.சா.ஆ.6. கேவியட் மனு எண்.138/2012 மதுரை விடுமுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது அதன் நகல் வா.சா.ஆ.7. கொட்டாம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.64/2014 வழக்கினுடைய முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ.8. என்னோடு தாசுதீன் ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்படாத ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.9. காவல்துறை துணை ஆய்வாளர் அவர்களிடம் நான் எழுதிக்கொடுத்த 25.05.2012 தேதியிட்ட கடிதம் வா.சா.ஆ.10. காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் நான் எழுதிக்கொடுத்த 29.05.2012 தேதியிட்ட கடிதம் வா.சா.ஆ.11. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்காக என்னை மகேஸ்வரி அடித்ததால் நான் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் வா.சா.ஆ.12. காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு சிக்கந்தர் பீவி 23.07.2012 அன்று கொடுத்த புகார் மனு தொடர்பான ஆவணம் வா.சா.ஆ.13. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.14. பிரதிவாதிகளுக்கு கொடுத்த அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சல் மேலுறை

ரசீதின் ஒளிநகல் வா.சா.ஆ.15. அஞ்சல் ஒப்புதல் அட்டையின் ஒளிநகல் வா.சா.ஆ.16. சுலைகா அவர்களுடைய வாரிசுதாரர் சான்றிதழ் வா.சா.ஆ.17. சிக்கந்தர் பீவி காவல்துறையில் புகார் தெரிவித்தது தொடர்பாக நில அபகரிப்பு பிரிவில் கொடுக்கப்பட்ட புகார் தொடர்பான ஆவணம் வா.சா.ஆ.18.

பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை : இல்லை

sd./M.Samundeeswari Prabha
Sub Judge,
Melur